**அனுப்புநர்**

முனைவர். சி. உஷாராணி,
எம்.எஸ்ஸி., பி.எட்., பிஎச்.டி.,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்,
இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி.

**ந.க.எண். 127311 / எச்1 / 2019** **நாள் : 29.02.2020**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 – மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வு, மார்ச் 2020 – பழைய நடைமுறையில் (200 மதிப்பெண்களுக்கு) தேர்வெழுதி தோல்வியுற்றோர் – புதிய நடைமுறையில் தேர்வெழுதினால் – தனித்தேர்வர்கள் – மதிப்பெண் வழங்கும் முறை – தேர்வு மையங்களின் அறிவிப்பு பலகையில் ஒட்டுமாறு அறிவுறுத்தல் – சார்பு.

-----

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும், தங்கள் ஆளுகைக்குட்பட்ட பழைய பாடத்திட்டத்தில் தேர்வெழுதும் தனித்தேர்வர்களுக்கான தேர்வு மையங்களின் (பழைய நடைமுறையின்படி (Old Pattern) மொத்தம் 1200 மதிப்பெண்களுக்கு மேல்நிலை இரண்டாம் ஆண்டு தேர்வெழுதி தோல்வியுற்றோர், தோல்வியுற்ற பாடங்களை புதிய நடைமுறையில் (New Pattern) எழுதும் தனித் தேர்வர்களுக்கான தேர்வு மையங்கள்) அறிவிப்பு பலகையில் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படும் அறிவுரையினை ஒட்டி வைக்குமாறு சம்பந்தப்பட்ட தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்களுக்கு அறிவுறுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**ஒம்/–**
**இயக்குநர்**

**இணைப்பு:**

மேல்நிலை இரண்டாம் ஆண்டு (பழைய நடைமுறை – Old Pattern)
தேர்வெழுதி தேர்ச்சி பெறாதவர்களுக்கான அறிவுரைகள்.

## மேல்நிலை இரண்டாம் ஆண்டு (பழைய நடைமுறை – Old Pattern) தேர்வெழுதி தேர்ச்சி பெறாதவர்களுக்கான அறிவுரைகள்

### ஏற்கனவே பழைய நடைமுறையின்படி (Old Pattern) மேல்நிலை இரண்டாம் ஆண்டு (+2) தேர்வெழுதி தேர்ச்சி பெறாதவர்கள் புதிய நடைமுறையில் (New Pattern) தேர்வெழுதினால் மதிப்பெண் வழங்கும்முறை

ஏற்கனவே பழைய நடைமுறையின்படி (Old Pattern) (ஒவ்வொரு பாடத்திற்கும் 200 மதிப்பெண்கள் வீதம் மொத்தம் 1200 மதிப்பெண்களுக்கு) மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வெழுதி தேர்ச்சி பெறாதோர், விண்ணப்பித்து வருகைபுரியாதோர் ஆகியோருக்கு தேர்ச்சி பெறாத பாடங்களில் புதிய நடைமுறையின்படி செய்முறைத் தேர்வுள்ள பாடங்களுக்கு 70 மதிப்பெண்களுக்கும், செய்முறைத் தேர்வில்லாத பாடங்களுக்கு 90 மதிப்பெண்களுக்கும் தேர்வு நடத்தப்பட்டு, அவர்கள் பெறும் மதிப்பெண்கள் 150/200 மதிப்பெண்களுக்கு கீழ்க்கண்டவாறு மாற்றம் செய்தபின்னர் தேர்வு முடிவு வெளியிடப்படும்.

### (i) மொழிப் பாடம் மற்றும் ஆங்கிலப் பாடம்

பழைய நடைமுறையின்படி (Old Pattern) மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வில் 100 மதிப்பெண்களுக்கான மொழிப்பாடம் / ஆங்கிலப்பாட முதல் தாளினையும், 80 மதிப்பெண்களுக்கான மொழிப்பாடம் / ஆங்கிலப்பாட இரண்டாம் தாளினையும், எழுதி தோல்வியடைந்த தேர்வர்கள், 90 மதிப்பெண்களுக்கு ஒரே தாளாக நடத்தப்படும் மொழிப்பாடம் / ஆங்கிலப்பாடத்தேர்வினை எழுதுதல் வேண்டும். அப்பாடத்தேர்வுகளில் அத்தேர்வர்கள் 90 மதிப்பெண்களுக்கு பெறும் மதிப்பெண்களை 2 –ஆல் பெருக்கி 180 மதிப்பெண்களுக்கான மதிப்பெண்களாக மாற்றம் செய்து, கற்றல் / கேட்டலுக்கான 20 மதிப்பெண்களையும் சேர்த்து 200 மதிப்பெண்களுக்கு மாற்றம் செய்து தேர்வு முடிவு வெளியிடப்படும்.

### (ii) செய்முறைத் தேர்வு இல்லாத (Non Practical ) பாடங்கள்

ஜுன் 2019 வரை பழைய நடைமுறையில் (1200 மதிப்பெண்கள்) மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வெழுதி, செய்முறைத் தேர்வு இல்லாத பாடங்களில் தேர்ச்சி பெறாத/ வருகை புரியாத தனித்தேர்வர்களுக்கு புதிய நடைமுறையில் 90 மதிப்பெண்களுக்கு தேர்வு நடத்தப்படும். 90 மதிப்பெண்களுக்கு தேர்வர்கள் பெறும் மதிப்பெண்கள் $x$ எனில், அம்மதிப்பெண்ணை 90 ஆல் வகுத்து, 200 ஆல் பெருக்கி $\left[\frac{x}{90} \times 200\right]$ 200க்கு மாற்றம் செய்து தேர்வு முடிவு வெளியிடப்படும்.

### (iii) செய்முறைத் தேர்வு உள்ள (Practical ) பாடங்கள்

ஜுன் 2019 வரை பழைய நடைமுறையில் (1200 மதிப்பெண்கள்) மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வெழுதி, செய்முறைத் தேர்வுள்ள பாடங்களில் தேர்ச்சி பெறாத/ வருகை புரியாத தனித்தேர்வர்களுக்கு புதிய நடைமுறையில் 70 மதிப்பெண்களுக்கு தேர்வு நடத்தப்படும். 70 மதிப்பெண்களுக்கு அவர்கள் பெறும் மதிப்பெண்கள் 150க்கு மாற்றம் செய்து தேர்வு முடிவு வெளியிடப்படும். (செய்முறைத் தேர்வு 50 மதிப்பெண்கள்) எழுத்துத்தேர்வில் 70 மதிப்பெண்களுக்கு தேர்வர்கள் பெறும் மதிப்பெண்கள் $x$ எனில், அம்மதிப்பெண்ணை 70 ஆல் வகுத்து, 150 ஆல் பெருக்கி $\left[\frac{x}{70} \times 150\right]$ பெறப்படும் மதிப்பெண்ணுடன் செய்முறைத்தேர்வின் மதிப்பெண்ணையும் சேர்த்து 200க்கு மாற்றம் செய்து தேர்வு முடிவு வெளியிடப்படும்.

ஒம்/–
இயக்குநர்